# கல்விக் கோட்டம் - நல்லூர் யாழ்ப்பாணம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2013

தரம் - 5

**சைவசமயம்**

பெயர் :............................................................................

நேரம் : 1 மணித்தியாலம்

- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01) திருக்கைலாயமலையில் இருப்பவர்?
   1. பிரமா　　2. சிவபெருமான்　　3. பிள்ளையார்

02) இந்திரன் சபையில் அவமதிக்கப்பட்டவர்?
   1. வாமதேவர்　　2. விநாயகர்　　3. ஜனகமகாராஜன்

03) பிரமா சிறையில் வாடுவது குறித்துச் சிவனிடம் முறையிட்டோர்?
   1. முனிவர்கள்　　2. தேவர்கள்　　3. அடியார்கள்

04) சமய குரவர் அல்லாதவர்கள்
   1. ஞான சம்பந்தர்　　2. அப்பர்　　3. திருமூலர்

05) “கூற்றாயினவாறு........” என்னும் பதிகம் பாடியவர்
   1. ஞான சம்பந்தர்　　2. அப்பர்　　3. சுந்தரர்

06) விநாயகரின் ஐந்து கரங்களில் பாசம் குறிப்பது
   1. படைத்தல்　　2. காத்தல்　　3. அழித்தல்

07) சிவபெருமானின் வாகனம்
   1. மயில்　　2. பெருச்சாளி　　3. இடபம்

08) தந்தைக்கு உபதேசம் செய்தவர்
   1. முருகன்　　2. விநாயகர்　　3. பிரமன்

09) பாண்டிய நாட்டில் உள்ள நகரம்
   1. மதுரை　　2. திருச்சி　　3. சென்னை

10) திருநாவுக்கரசரை பிடித்து வருந்திய நோய்
   1. காய்ச்சல்　　2. சூலை நோய்　　3. முயலகன் நோய்

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

♦ "அ" பகுதிக்குப் பொருத்தமான சொல்லை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை எழுதுக.

| "அ" | | "ஆ" |
|---|---|---|
| 1. தோடுடைய செவியன் | (   ) | 1. மருணீக்கியர் |
| 2. திருநாவுக்கரசர் | (   ) | 2. ஞான சம்பந்தர் |
| 3. பிரமாவின் தொழில் | (   ) | 3. திரிசூரன் |
| 4. திருமந்திரம் | (   ) | 4. விநாகர் |
| 5. விரோசனை | (   ) | 5. திருமூலர் |
| 6. அறுகம்புல் நாயகர் | (   ) | 6. படைத்தல் |
| 7. கிரவுஞ்சன் | (   ) | 7. இசைப்பிரியன் |
| 8. வரகுண பாண்டியன் | (   ) | 8. கந்தர்வன் |

(8 x 2 = 16புள்ளிகள்)

♦ பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்கு கூறப்பட்டுள்ளது.

1. "இப்போது எங்களிடம் இருப்பதெல்லாம் விநாயகருக்குப் பூசை செய்ய வைத்திருக்கும் அறுகம்புல்லே" என கூறினார்.

யாரால் :- ..........................................................

யாருக்கு :- ..........................................................

2. "குருவாய் அமர்ந்து பிரணவத்தின் பொருளை என் செவியுள்ளே கூறுக" என்றார்.

யாரால் :- ..........................................................

யாருக்கு :- ..........................................................

3. "அப்பா நீ பாடிய பாடலை மீண்டும் ஒருமுறை பாடு"

யாரால் :- ..........................................................

யாருக்கு :- ..........................................................

(3 x 2 = 6புள்ளிகள்)

♦ தரப்பட்ட படத்தில் உள்ள சைவசமய குரவரை இனங்கண்டு விடை எழுதுக.



1. இவரின் பெயர் என்ன?

..........................................................

2. இவரின் பிறந்த இடம் யாது?

..........................................................

3. இவரின் பெற்றோர் பெயர் யாது?

..........................................................

4. இவரின் குரு பூசைத் தினம் எது?

..........................................................

5. இவர் செய்த அற்புதங்கள் 2 எழுதுக?

1. ..........................................................

2. ..........................................................

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

♦ சரியாயின் [ √ ] எனவும் பிழையாயின் [ × ] எனவும் அடையாளமிடுக.

1. அறுகம்புல் விநாயகருக்கு விருப்பமானது. [ ]

2. சிவபெருமானின் சக்தி உமாதேவியார். [ ]

3. சுவாமி நாதன் என்ற பெயர் பிரமனுக்கு ஏற்பட்டது. [ ]

4. பாணபத்திரன் வட நாட்டிலிருந்து மதுரைக்கு வந்தான். [ ]

5. சுந்தரேசப் பெருமான் விறகு விற்பவன் போல வேடம் தாங்கி வந்தார். [ ]

6. சமய குரவர்கள் இறையருள் பெற்றவர்கள். [ ]

7. சுந்தரரின் குரு பூசைத்தினம் வைகாசி மூலமாகும். [ ]

8. சுவாமி நாதன் என்ற பெயர் விநாயகரைக் குறிக்கும். [ ]

9. வரகுண பாண்டிய மன்னன் தனது அரசசபைக்கு பாண பத்திரனை அழைத்தான். [ ]

10. திருத்தாண்டகம் பாடியவர் அப்பர். [ ]

(10 x 2 = 20 புள்ளிகள்)

♦ சுருக்கமான விடைதருக.

1. விநாயகரின் ஐந்தாவது கரம் எதனைக் குறிக்கின்றது?

......................................................................................................................

2. வேதியர் சென்ற வீட்டுத்தம்பதியர் யாவர்?

......................................................................................................................

3. திருமந்திரம் பாடியவர் யார்?

......................................................................................................................

4. சிவ குரு என அழைக்கப்படுபவர் யார்?

......................................................................................................................

5. வடநாட்டில் வாழ்ந்த இசை மேதை யார்?

......................................................................................................................

(5 x 2 = 10 புள்ளிகள்)


kalvi.lk

♦ **இடைவெளிகளை நிரப்புக.**

1. பிள்ளையார் சுழி ................................................................................ என்ற மந்திரத்தின் சுருக்கமாகும்.

2. திருவாசகம் பாடியவர் ................................................................................ ஆவார்.

3. முருகன் ................................................................................ மயிலின் மீது அமர்ந்து பிரவணத்தின் பொருளை உபதேசித்தார்.

4. இறைவன் முதிர்ந்த விறகு விற்பவனாக ................................................................................ பூண்டார்.

(4 x 2 = 08 புள்ளிகள்)

♦ **பின்வரும் பாடலை வரிக்கிரமாகப் பிழையின்றி எழுதுக.**

1. முத்தி தருவது நீறு..........................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................

................................................................................................................................


................................................................................................................................

(10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk




# தரம் 5

# புலமை வித்தகன்

தரம் 5 மாணவர்களிற்கான யாழ்ப்பாணம் R.PRASANTHAN (PRI.TRD) ஆசிரியர் எழுதிய புலமைவித்தகன் மாதிரி வினாத்தாள்கள்.

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY ( தபால்காரரிடம் விலை 1050/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page